இரண்டாம் ஆண்டு தேசிய அளவிலான தமிழ் வழக்கு வாதப்போட்டி
16 - ஏப்ரல் – 2021 முதல் 18 – ஏப்ரல் – 2021

## வழக்கின் பொருண்மைகள்

"பொதிகை" நாட்டின் "வாகை" மாநிலத்தில், "திலகம்" மாவட்டத்தில் "அழகிய மொழி" என்னும் கிராமத்தில் "கயல்விழி" என்னும் கல்லூரி மாணவி இருந்தாள். அங்குள்ள பொறியியல் கல்லூரியில் மூன்றாமாண்டு பயிலும் போது, அழகிய மொழி கிராமத்திற்கு அருகில் உள்ள "பூஞ்சோலை" என்னும் கிராமத்தில் "இனியன்" என்ற மாணவன் பொறியியல் படிப்பை இதே கல்லூரியில் படித்தான். இவர்கள் இருவரும் ஒரே சமயத்தவராயினும், வேறுபட்ட சமூகத்தை சேர்ந்தவர்கள் ஆவர். இனியன் "பட்டியலின" சமூகத்தை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இருவரும் தங்கள் கல்லூரிப் படிப்பின் போது ஒருவரோடு ஒருவர் நன்றாகப் பழகி பிறகு காதலிக்கத் தொடங்கினர். இந்த காதலுக்கு பெண்ணின் பெற்றோர் மற்றும் உறவினர்களிடமிருந்து எதிர்ப்பு வந்தது. இதனிடையே இருவரும் சீர்திருத்த முறையில் திருமணம் செய்து கொண்டனர்.

திருமணத்திற்கு பிறகு இருவரும் கல்லூரிக்குச் செல்வதும் பகுதிநேர வேலை செய்து தங்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டனர். இதற்கிடையில் பெண்ணின் பெற்றோரிடமிருந்து கொலை மிரட்டல்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் வந்தான். ஒருமுறை பெண்ணைக் கூட்டிச் சென்று மிரட்டி தாலியினைப் பறித்துக் கொண்டு தலையில் தண்ணீர் தெளித்து இனியனை மறந்துவிடும்படி எச்சரிக்கை விடுத்தனர். அதன்பிறகு அவளது கணவன் இனியன் காவல் நிலையத்தில் "மனைவியைக் காணவில்லை" என்று புகார் அளித்த பிறகு அவரது மனைவி கயல்விழி தன் கணவர் வீட்டிற்கு வந்தார். காவல் நிலையத்தில் பெற்றோர் தன்னை கடத்தி சென்றதாகவோஇ சித்ரவதை செய்ததாகவோ தகவல் தெரிவிக்கவில்லை.

சம்பவத்தன்று இருவரும் கடைத்தெருவிற்கு சென்று தங்களுக்கு தேவையான பொருட்களை வாங்கி கொண்டு பட்டப்பகலில் சாலையைக் கடக்க முயற்சிக்கும் போது பின்புறம் இருவரும்இ முன்புறம் இருவருமாய் மோட்டர் சைக்கிள்களில் வந்தவர்களின் உதவியுடன் கொலை செய்யும் நோக்கத்துடன் கொடூர தாக்குதல் நடத்தி இருவரையும் தாக்கினர். ரத்த வெள்ளத்தில் துடிக்க துடிக்க இருவரையும் வெட்டி விட்டு சென்றனர். பொதுமக்கள் மத்தியில் நடைபெற்ற இந்த கோரசம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் இனியன் இறந்துவிட்டார். கயல்விழி கொடுங்காயங்களுடன் உயிர் தப்பினார்.

இந்த கொலை வழக்கு திலகம் மாவட்டத்தின் அமர்வு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டது. விசாரணையின் போது கயல்விழியின் அப்பா பொன்னுசாமி அவரது தாய்மாமன் பூவரசன் அவரது இருநண்பர்கள் மற்றும் அவர்களால் தயார் செய்யப்பட்ட மூன்று கூலிப்படையினர் மீதும் கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இதில் நீதிமன்றம் கயல்விழியின் அப்பா, தாய்மாமன் உட்பட 7 நபர்கள் "கொலைக் குற்றவாளிகள்" எனக் கூறி 4 குற்றவாளிகளுக்கு மரணதண்டனையும் ஒரு குற்றவாளிக்கு ஆயள் தண்டனையும், அபராதமும் விதித்து தீர்ப்பளித்தது.

இதனை எதிர்த்து குற்றவாளிகள் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். இவ்வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம் முதன்மை குற்றவாளியான கயல்விழியின் தந்தை பொன்னுசாமி மற்றும் தாய்மாமன் பூவரசன் ஆகியோர்களை போதிய சாட்சிகள் ஏதுமில்லை எனக்கூறி விடுவித்தும் மற்ற குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை அளித்தும் திலகம் அமர்வு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை, வாகை மாநில உயர்நீதிமன்றம் ரத்து செய்து தீர்ப்பு வழங்கியது.

SRM INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY (Deemed to be University u/s 3 of UGC Act, 1956)

இதேபோன்று சம்பவம் "சிலம்பு" மாநிலத்தில் வேறு சமூகத்தை சேர்ந்த ஆண் மகனை திருமணம் செய்ததால் பட்டியலின சமூகத்ததை சேர்ந்த பெண்ணை கொடூரமாகத் தாக்கி அவளது கணவரின் பெற்றோர், கர்ப்பமான அப்பெண்ணின் பிறப்புறுப்பில் மிதித்து தாக்கியதன் விளைவாக அதீத ரத்தப்போக்கு காரணமாக உயிரிழந்தார்.

மற்றொரு நிகழ்வு, "அதியமான்" மாநிலத்தில் வேறுபட்ட சமூகத்தைச் சேர்ந்த இருவர் திருமணம் செய்ததன் விளைவாக கணவர், அவரது மாமனாரால் படுகொலை செய்யப்பட்டார்.

இது போன்ற தொடர் படுகொலைகள் வாகை மாநிலத்தின் "பிறைசூடன்" மாவட்டத்திலும், "இளம்பிறை" என்ற மாவட்டத்திலும் நடைபெற்றது. இப்படுகொலைகளை எதிர்த்தும், சமூக சீர்திருத்த திருமணங்களை ஆதரிக்கும் வண்ணமாக, "இளந்தளிர்கள்" என்ற அறக்கட்டளை செயல்பட்டு வருகிறது. அந்த அறக்கட்டளை சார்பாக அரசுக்கு, இதே மாதிரியான சமூகத்திற்கு எதிரான படுகொலைகளை தடுக்க சட்டம் இயற்றுமாறு கோரிக்கை விடுத்தது. உச்சநீதிமன்றத்தில் ஓர் பொதுநலவழக்கும் இவ்வமைப்பு சார்பாக தொடுக்கப்பட்டது.

INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY
(Deemed to be University u/s 3 of UGC Act, 1956)

பல்வேறு அரசியல் கட்சியின் தலைவர்கள் ஊடகங்களின் வாயிலாக இதனை தடுப்பதற்கு தனி சட்டம் இயற்றப்பட வேண்டும் என கருத்து தெரிவித்தனர். இனியன் படுகொலை வழக்கின் உயர்நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து வாகை மாநில அரசின் சார்பில் மேல்முறையீட்டு மனுவினை ஏற்றுக்கொண்ட உச்சநீதிமன்றம் இதனோடு தொடர்புடைய பல உயர்நீதிமன்ற வழக்குகளையும், "இளந்தளிர்கள்" அறக்கட்டளை சார்பாக தொடுக்கப்பட்ட பொது நலவழக்கையும் சேர்த்து, தாமாக முன்வந்து ஒரே வழக்காக விசாரணைக்கு எடுத்துக் கொண்டது.

பொதிகை நாட்டின் அரசியலமைப்பு சட்டத்தின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதாக இவ்வழக்கின் கோப்பு உச்சநீதிமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பு: "இந்திய நாட்டின் அனைத்துச் சட்டங்களும் பொதிகை நாட்டிற்கும் பொருந்தும்."

7. இதர :

நீதிமன்றம் தொடர்பான விதிகளை அமல்படுத்துதல் மற்றும் விளக்குவது தொடர்பான இறுதி முடிவு ஒருங்கிணைப்பாளர் குழுவிடம் உள்ளது.

**நிகழ்ச்சி**

| வ.எண் | நிகழ்ச்சி | தேதி |
|---|---|---|
| 1 | முன்பதிவு செய்ய கடைசி நாள் | 05 – ஏப்ரல் - 2021 |
| 2 | இதர தகவல்களுக்கான கடைசி நாள் | 07 – ஏப்ரல் - 2021 |
| 3 | வாதுரை சமர்ப்பிக்க கடைசி நாள் | 11 – ஏப்ரல் - 2021 |
| 4 | சிறந்த ஆராய்ச்சியாளர்க்கான தேர்வு | 16 – ஏப்ரல் - 2021 |
| 5 | தகுதிச் சுற்று மற்றும் காலிறுதிச்சுற்று | 17 – ஏப்ரல் - 2021 |
| 6 | அரையிறுதி மற்றும் இறுதிச்சுற்று | 18 – ஏப்ரல் - 2021 |

பதிவு செய்வதற்கான இணைப்பு :- https://forms.gle/E5f1VHPxDBXnMipH7

SRM INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY (Deemed to be University u/s 3 of UGC Act, 1956)

**விருது**

| பரிசு | பரிசுத்தொகை |
|---|---|
| முதல் பரிசு | ரூ.30,000/- |
| இரண்டாம் பரிசு | ரூ.21,000/- |
| சிறந்த மாணவ வழக்குரைஞர் | ரூ.7,000/- |
| சிறந்த ஆராய்ச்சியாளர் | ரூ.7,000/- |
| சிறந்த வாதுரை | ரூ.7,000/- |

